**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.48/2024**

**தேதி : 27.03.2026**

**(பி.வா.சா.1) – திரு. சுப்பிரமணி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 5–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (5–ம் பிரதிவாதி தரப்பில்)**

1. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய வயது 74 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி முருகேசன் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் பக்கத்தில் குடியிருப்பதால் எனக்குத் தெரியும். 5–ம் பிரதிவாதி முருகேசன் என் தாயார் தாயம்மாளிடம் 11.02.1997 அன்று கிரையம் பெற்றார் என்றால் எனக்குத் தெரியாது. 5–ம் பிரதிவாதி முருகேசன் என்னுடைய தாயாரிடம் கிரையம் பெற்று, வீடு கட்டி 25 ஆண்டுகளாக குடியிருக்கிறார் என்றால் அவர் என் தாயாரிடம் கிரையம் பெறவில்லை.

2. தாவாச்சொத்து 20 ஏக்கருக்குமேல் உள்ளது என்றால் அது பழனிச்சாமிக் கவுண்டருக்குத்தான் தெரியும். மேற்படி 20 ஏக்கரில் 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நானும், முருகேசனும் வீடு கட்டி குடியிருந்து வருவதாகச்சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. பழனிச்சாமிக் கவுண்டரிடம் நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம். கடந்த 23.12.1991 அன்று பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.611/1999 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் சரிதான்.

(**வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.28 18:07:08 +0530

Additional Sub Judge,
Palani.